# செயலாற்றுகை அறிக்கை - 2017

***வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை***
***அமைச்சு***
***இரண்டாம் மாடி,***
***"செத்சிறிபாய", பத்தரமுல்லை***

## கௌரவ அமைச்சரின் செய்த



2025 ஆம் ஆண்டில் "யாவருக்கும் புகலிடம்" என்பதை இலக்காகக் கொண்ட எமது வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டமானது பல்வேறு தடைகள் மற்றும் சவால்களையும் வென்று முன்னோக்கிப் பயணிக்கின்றது.

இந்நாட்டின் வீடமைப்புத் தேவை தொடர்பில் 2016 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்ட பரந்தளவிலான ஆய்வு மூலம் இந்நாட்டில் நிலவுகின்ற உண்மையான நிலைமையை வெளிப்படுத்திக் கொள்ள முடிந்தது. இதன் மூலம் தெரியவந்திருப்பது 6,094,115 ஆகக் காணப்படுகின்ற இந்நாட்டு குடும்பங்களின் எண்ணிக்கையில் 2,568,451 குடும்பங்கள் அதாவது, 42மூ ஏதேனுமொரு வகையில் வீடமைப்புச் சிக்கலொன்றின் மூலம் பாதிக்கப்பட்டுள்ளமையாகும்.

இந்நாட்டு வீடமைப்புக் கொள்கையை இற்றைப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டு வீடமைப்புமயமாக்கல், குடியிருப்பு உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற அபிவிருத்தித் துறைகளைச் சேர்ந்த கல்விமான்களைக் கொண்ட குழுவினால் அர்த்தப்பூர்வமான செயற்பணியொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் உதவி வழங்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் யாவருக்கும் புகலிடத்தை உரித்தாக்கிக் கொடுக்கும் எமது முயற்சிக்காக தயார் செய்யப்பட்டுள்ள நடுத்தரகால அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தற்போது வேறு அமைச்சுக்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திட்டங்களும் கண்காணிப்புச் செய்யப்படும். அதற்கமைய எந்தவொரு மக்கள் பிரிவினரும் விடுபடாதவாறு வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தயார் செய்து அமுல்படுத்தும் சவால்மிக்க பொறுப்பு எமது அமைச்சின் கீழ் காணப்படும்.

வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் இதுவரை கவனத்தில் கொள்ளப்பட்ட குறைந்த வருமானம் பெறுகின்ற பிரிவினருக்கு மேலதிகமாக கடன் தவணையை திருப்பிச் செலுத்தும் ஆற்றல் இல்லாத மிகவும் வறிய குடும்பங்களுக்கான "கிராம சக்தி" வீடமைப்பு உதவி நிகழ்ச்சித்திட்டத்தையும் அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சமுதாயத்தினருக்கு உதவி வழங்கும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியமை, மேற்படி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட படைவீரர்களுக்காக "விரு சுமிதுரு"

வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டமையும் இங்கு குறிப்பிடக்கூடிய மிகவும் முக்கியமான இருவிதமான அணுகுமுறைகளாகும். அத்துடன் இனங்காணப்பட்ட நீண்டகால சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்காகவும் மற்றும் சியம்பலாண்டுவ, வவுனியா, போகஸ்வெவ போன்ற பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் விசேட வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தியமை போன்ற பல்வேறு விசேட நிகழ்ச்சித்திட்டங்களை 2017 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்க முடிந்தது.

அவ்வாறே, தொடர்மாடி வீடுகளை புனரமைத்தல், நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கான வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல், அரசாங்க வாடகை வீடுகளின் உரிமையாளர்களுக்கு உரித்து உறுதிகளை அன்பளிப்புச் செய்தல், கூட்டாட்சி ஆனங்கள் தொடர்பிலான அபிவிருத்தி நடவடிக்கைகள், நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் பௌதீக மற்றும் சமூக அபிவிருத்திக்கான பாரிய செயற்பணிகளை 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்ற முடிந்தது.

எமது நிகழ்கால வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் மிகவும் வறிய தொகுதிகளுக்கு உரித்தான குடும்பங்கள் மற்றும் படைவீரர்களின் குடும்பங்கள், பெண்களை பிரதானமாகக் கொண்ட குடும்பங்கள், சிறுநீரக நோயாளர்களைக் கொண்ட குடும்பங்கள், வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உட்பட சமூக, பொருளாதார செயன்முறையில் பின்னடைவை எதிர்கொண்டுள்ள சகல மட்டங்களுக்கும் உரித்தான குடும்பங்கள் பயன்களைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றன.

தேசிய அபிவிருத்திச் செயன்முறையில் எமது செயற்பணி எந்தளவுக்கு பாராட்டைப் பெற்றுள்ளது என்பதை 2018 இன் ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்ட மூலதனப் பயன்பாட்டிலிருந்து வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை 6.9 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதன் மூலம் உறுதிசெய்யப்படுகின்றது. இதன் செலவிடும் விளைதிறனை 100மூ ஆக உறுதிசெய்து ஏனைய அமைச்சுக்களுக்கு மத்தியில் முதல்நிலைக்கு முன்னேற எமக்கு முடியுமாயிற்று.

இந்த வெற்றிக்கு வழிவகைகளைச் செய்துகொடுத்த மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களையும், கௌரவ பிரதம அமைச்சர் அவர்களையும் நன்றியுணர்வுடன் நினைவுகூர்கின்றேன். என்னைத் தொடர்ந்தும் ஊக்குவித்த அமைச்சின் செயலாளர்கள் இருவரும் உள்ளடங்களாக பதவியணியினர், அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சகல நிறுவனங்களினதும் தலைவர்கள் உள்ளிட்ட ஏனைய அலுலவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

**சஜித் பிரேமதாச (பா.உ.),**

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் .

## கௌரவ பிரதி அமைச்சரின் செய்த



வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் தொடர்பாக உச்சமட்ட மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்த ஒரு ஆண்டின் இறுதியில் மேற்படி விடயப் பொறுப்பு நேர்வரிசை அமைச்சின் செயலாற்றுகை அறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை பெருமகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றேன்.

வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது இதுவரை முன்னுரிமை வழங்கப்பட்டுவந்த குறைந்த வருமானம் பெறுகின்ற குழுவினருக்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டில் வறுமையிலிருந்து விடுதலை பெறும் ஆண்டாக மேன்மைதங்கிய சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் அமுல்படுத்தப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு, மிகவும் வறிய மக்களுக்கு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை திசைமுகப்படுத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தமையானது கடந்த ஆண்டில் நாம் பெற்றுக் கொண்ட மிகவும் முக்கியமானதொரு வெற்றியாகும்.

அதற்கமைய, பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்னடைவான வலயங்கள் மற்றும் மிகவும் வறிய ஆட்களுக்கான “கிராம சக்தி” மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அத்துடன் இனங்காணப்படாத நீண்டகால சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் படைவீரர்களின் குடும்பங்களை முன்னிலைப்படுத்தியதாக பல்வேறு இனப்பிரிவினர்களுக்காகவும் பாசத்துடன் வீடமைப்புச் சிக்கலைத் தீர்த்துவைக்கின்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நிர்மாணக் கைத்தொழிலை மேம்படுத்தும் விடயத்திலும் சட்டரீதியான மற்றும் நிறுவனரீதியான சட்டகத்தை வலுவூட்டல் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் எதிர்நோக்குகின்ற தற்காலத்தின் சவால்களை வென்றெடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை தயார் செய்வதிலும் பெருமுயற்சிகளை மேற்கொண்டு பெறுபேறுகளை அடைந்துகொண்ட ஆண்டாக 2017 ஆம் ஆண்டு தொடர்பில் மகிச்சியுற முடியும்.

மக்களின் நலன் மற்றும் தேசிய அபிவிருத்திக்கு உணரப்படக்கூடியவாறான செயற்பணியொன்றை நிறைவேற்றுவதற்கு மேன்மைதங்கிய சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விரக்கிரமசிங்க அவர்கள் உள்ளிட்ட அமைச்சரவை வழங்கிய ஒத்துழைப்பு, பலம் மற்றும் மனஉறுதிதொடர்பில் நன்றி தெரிவிப்பதுடன், கௌரவ வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச அவர்களினால் அபிவிருத்திசார் உபாயமுறைகளை பயன்படுத்தல் மற்றும்

இலக்குகளை வெற்றிகொள்வதற்காக வழங்கிய தலைமைத்துவத்தைப் பாராட்டுவதற்கும் இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

மேலும், 2017 ஆம் ஆண்டில் சவால்களை வெற்றிகொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஒட்டுமொத்த பதவியணியினருக்கும், இணைந்த நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த பதவியணியினருக்கும், கௌரவ அமைச்சர் மற்றும் எனது அந்தரங்க பதவியணியினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இந்திக பண்டாரநாயக்க**
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

## செயலாளரின் செய்த



வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் 2017 ஆம் ஆண்டுக்காக தயார்செய்யப்படுகின்ற செயலாற்றுகை அறிக்கைக்கு பெருமகிழ்ச்சியுடன் செய்தியொன்றை வெளியிடுகின்றேன்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை ஆகிய இரண்டு துறைகளிலும் இலக்காகக் கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பணியை வினைத்திறனுடன் நிறைவேற்றியதன் பெறுபேறாக இந்த அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட வருடாந்த ஏற்பாடுகளில் 100மூ இனையும் நோக்கங்களை திசைமுகப்படுத்தி செலவினங்களைச் செய்து நிதியினை ஈடுபடுத்தி வினைத்திறன் பற்றிய பதிவில் உச்சநிலையை அடைந்துகொள்ள ஆற்றல் கிடைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றேன்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புத் தேவைகள் பற்றிய ஆய்வின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் சகல பிரதேசங்களிலும் பரந்துள்ள பல்வேறு இனப்பிரிவினர் எதிர்நோக்கியுள்ள வீடமைப்புச் சிக்கல்களின் உண்மையான நிலைமையை சரியாக இனங்கண்டு, அதற்கு விஞ்ஞான ரீதியிலான அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட ஆண்டாக 2017 ஆம் ஆண்டை அறிமுகம் செய்ய முடியும்.

நிர்மாணக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக புதிய கலைஞர்களை இத்துறைக்கு ஈர்த்தெடுப்பதற்கான “சில்ப சவிய” நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெற்றுத் தரும் வகையில் அமுல்படுத்தப்பட்டதுடன், நிர்மாணக் கைத்தொழிலை மேம்படுத்துவது தொடர்பிலான சட்டரீதியான மற்றும் கொள்கைசார் சட்டகத்தை வலுவூட்டுவதற்கு சிறந்ததொரு பணியை நிறைவேற்றிய ஆண்டாகவும் 2017 ஆம் ஆண்டை அறிமுகம் செய்ய முடியும்.

வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொண்டு அதற்குத் தேவையான வளங்களைப் பயன்படுத்தல் மற்றும் வழிகாட்டலை சரியான முறையில் நிறைவேற்றி நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். இந்த அமைச்சின் விடயப்பரப்புக்கு உரித்தான கொள்கைசார் தீர்மானங்களை தத்துவமுள்ளதாக்கல் மற்றும் வழிகாட்டலுக்கு மேன்மைதங்கிய சனாதிபதி அவர்கள், கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் உள்ளிட்ட கௌரவ அமைச்சரவை வழங்கிய அளப்பரிய பங்களிப்புத் தொடர்பில் நன்றியைத் தெரிவித்துக்

கொள்வதுடன், இவ்வனைத்து வெற்றிகளையும் அடைந்துகொள்வதற்கான சரியான தலைமைத்துவம் மற்றும் அறிவுரைகளை வழங்கிய கௌரவ அமைச்சர் சஜித் பிரேமதாச அவர்களுக்கும், தொடர்ச்சியாக ஒத்துழைப்பை வழங்கி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிக்கின்ற கௌரவ பிரதி அமைச்சர் இந்திக பண்டாரநாயக்க அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்பு விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் போது வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவது அத்தியாவசியமாகும். அதற்கமைய தேசிய மட்டத்திலான மற்றும் மாவட்ட, பிரதேச மட்டத்திலான அலுவலர்களுடன் நல்லதொரு ஒருங்கிணைப்புடன் செயற்படுவதற்கு அவர்களிடம் கிடைத்த ஒத்துழைப்பை மிக உயர்வாக மதிக்கின்றேன்.

அத்துடன், சகல பணிகளையும் வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள் உள்ளிட்ட சகல அலுவலர்களுக்கும், கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவ பிரதி அமைச்சரின் பதவியணியினருக்கும், அமைச்சின் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள சகல நிறுவனங்களினதும் நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்தப் பதவியணியினருக்கும், பல்வேறு வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களின் தலைவர்களுக்கும் எனது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆர்.எம்.அபேரத்ன**
செயலாளர்,
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

| உள்ளடக்கம | பக்க இலக்கம |
|---|---|


| | |
|---|---|
| 1. அறிமுகம | 1-2 |
| 2. அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி | 3-3 |
| 3. அமைச்சின் கீழுள்ள பிரதான விடயப்பரப்புக்கள | 4-4 |
| 4. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பும், மனிதவளத் தோற்றப்பாடும | 5-5 |
| 5. அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியண | 6-7 |
| 6. அமைச்சின் ஒழுங்கமைப்பு | 8-14 |
| 6.1. நிருவாகப் பிரிவு | |
| 6.2. திட்டமிடல் பிரிவு | |
| 6.3. வீடமைப்புப் பிரிவு | |
| 6.4. தொழில்நுட்பப் பிரிவு | |
| 6.5. தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு | |
| 6.6. நிதிப் பிரிவு | |
| 6.7. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | |
| 7. அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள | 15-18 |
| 7.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | |
| 7.2 நகர குடியிருப்பு அதிகாரசபை | |
| 7.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை | |
| 7.4 ஓ'ன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி | |
| 7.5 வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம | |
| 7.6 அரசாங்க தொழிற்சாலை திணைக்களம | |
| 7.7 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை | |
| 7.8 அரச பொறியியல் கூட்டுத்தாபனம | |
| 7.9 தேசிய இயந்திர சாதன நிறுவனம | |
| 7.10 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம | |
| 7.11 கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம | |
| 8. நிதி ஏற்பாடுகள | 19-20 |
| 9. 2017 ஆம் ஆண்டுக்குரிய அமைச்சின் முன்னேற்றம | 22-29 |
| 9.1 நிருவாகப் பிரிவு | |
| 9.2 திட்டமிடல் பிரிவு | |
| 9.3 வீடமைப்புப் பிரிவு | |
| 9.4 தொழில்நுட்பப் பிரிவு | |
| 9.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு | |
| 9.6 நிதிப் பிரிவு | |
| 10. 2017 ஆம் ஆண்டு அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள. | 31-32 |

# 1. அறிமுகம

இலங்கையின் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் துரிதமான அபிவிருத்தி யுகத்தை நாம் இன்று அடைந்துள்ளோம். வீடமைப்புத் துறையை நோக்குவோமாயின், 2025 ஆம் ஆண்டளவில் "யாவருக்கும் புகலிடம்" என்பதை அடைந்துகொள்வதற்கான திசைமுகப்படுத்தப்பட்ட பாரிய வேலைத்திட்டத்தை நாம் வடிவமைத்துள்ளோம்.

மேற்படி வேலைத்திட்டமானது 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அமுல்படுத்தப்பட்ட நாடளாவிய ரீதியிலான வீடமைப்புத் தேவைகள் பற்றிய ஆய்வின் மூலம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. மேற்படி வீடமைப்புத் தேவை பற்றிய ஆய்வானது, இந்நாட்டின் ஒவ்வொரு குடும்ப அலகும் எதிர்நோக்கியுள்ள தற்கால வீடமைப்புச் சிக்கலின் உண்மையான வடிவத்தை புள்ளிவிபரரீதியில் இனங்காண்பதற்காக கிராமிய மட்டத்தில் அரச அலுவலர்களின் உதவியுடன் அமுல்படுத்தப்பட்ட பாரியதொரு முயற்சியாகும். இதன் மூலம் இந்நாட்டின் 6,094,115 ஆக உள்ள ஒட்டுமொத்த குடும்ப எண்ணிக்கையில் 42% ஆனோர் அதாவது, 2,568,451 குடும்பங்கள் ஏதேனுமொரு வகையில் வீடமைப்புச் சிக்கலை எதிர்நோக்கியிருப்பதை இனங்காண முடிந்துள்ளது.

இந்த வீடமைப்புச் சிக்கல்களை பல்வேறு அணுகுமுறைகளின் ஊடாக தீர்த்துவைக்கும் பொறுப்பானது, வீடமைப்புத் துறையில் செயற்படுகின்ற பல்வேறு அமைச்சுக்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அவற்றின் மையக் கொள்கைகளைத் தயார் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டிருப்பது இந்த அமைச்சுக்காகும். அதற்கமைய 2017 ஆம் ஆண்டு இலங்கையில் வீடமைப்புமயமாக்கல் மற்றும் குடியிருப்புக்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தித் துறையில் செயற்படுகின்ற கல்விமான்களைக் கொண்ட குழுவொன்றின் ஊடாக இலங்கையின் வீடமைப்புக் கொள்கைகளை இற்றைப்படுத்துவதற்கு அத்தியாவசியமான பணியொன்று நிறைவேற்றப்பட்டது.

மேற்படி தேசிய வீடமைப்புக் கொள்கையின் மூலம் 2025 ஆம் ஆண்டளவில் "யாவருக்கும் புகலிடம்" இனை அடைந்துகொள்வது மற்றும் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைய இலங்கையின் குடியிருப்பு அபிவிருத்திக்கு ஏற்படையதாகின்ற கொள்கைகளை இனங்காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி தேசிய வீடமைப்புக் கொள்கையைத் தயார் செய்யும் போது ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (ருே ர்யடிவையவ) மூலமும் பரந்தளவில் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

தேசிய வீடமைப்புக் கொள்கைக்கு மேலதிகமாக 2025 ஆம் ஆண்டில் யாவருக்கும் புகலிடத்தை அடைந்துகொள்வதற்கு மிகவும்

முக்கியமானதாக உள்ள நடுத்தரகால அபிவிருத்தித் திட்டமும் தயார் செய்யப்பட்டது. இதன் போது வீடமைப்புத் துறை என்ற வகையில் ஒட்டுமொத்த பங்களிப்பை இனங்காண்பதற்காக வீடமைப்புத் துறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்ற ஏனைய அமைச்சுக்களின் பங்களிப்பும் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதற்கமைய எந்தவொரு இனப் பிரிவினரும் கைவிடப்படாத வகையில் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்வது அமுல்படுத்தும் சவால்மிகு பொறுப்பை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, இன்று இந்த அமைச்சின் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினுள் குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் மிகவும் வறிய எனும் இரு வகையிலுமான வருமான மட்டங்களையும் கவனத்தில் கொண்டு வீடமைப்புக் கடன் மற்றும் உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன், இதன் போது பெண்களை பிரதானமாகக் கொண்ட குடும்பங்கள், இனங்காணப்படாத நீண்டகால சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள், வடக்கு, கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் என்ற வகையில் சமூக, பொருளாதார செயன்முறையில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள சகல இனப்பிரிவினரும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளனர்.

இப்புதிய அணுகுமுறையினுள் நாட்டின் வீடமைப்பு அபிவிருத்தித் தேவையானது தேசிய அபிவிருத்திச் செயன்முறையில் எம்மை எந்தளவுக்கு மேலே உயர்த்துவதற்கு செயற்பட்டுள்ளது என்பதை குறிப்பிடுவோமாயின், ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டத்தின் மூலதனப் பயன்பாட்டில் இந்த அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையை 6.9 பில்லியன் ரூபாவாக அதிகரிகத்துக்கொள்ள முடிந்துள்ளதன் மூலம் தெளிவாகின்றது.

நிர்மாணத்துறையை தனியாக நோக்கும் போது நாட்டின் நிர்மாணக் கைத்தொழில்துறையில் இடம்பெற்றுள்ள அண்மைக்கால விஸ்தரிப்புக்கு அமைவாக இக்கைத்தொழிலானது பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ளது. நிர்மாணக் கைத்தொழில்துறையின் நிபுணத்துவம்மிக்க கலைஞர்களுக்கான பற்றாக்குறை இதில் முன்னணி வகிக்கின்றது. எனவே 2016 ஆம் ஆண்டு பொதுத் திறைசேரியுடன் இணைந்து அமுல்படுத்திய நிர்மாணக் கலைஞர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் 2017 ஆம் ஆண்டிலும் அமுல்படுத்தப்பட்டதுடன், இதன் மூலம் தேசிய தொழில்சார் தகைமைகளைக் கொண்ட கலைஞர்கள் சுமார் 2401 பேரை நிர்மாணக் கைத்தொழில் துறைக்குப் பெற்றுக் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது சம்பந்தமாக அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை ஊடாக மேற்கொள்ளப்பட்டன. மேலும் தேசிய நிர்மாணக் கொள்கை தயார் செய்யப்பட்டு அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

## 2. அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி

### நோக்கு

" நிலைபேறான குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலில் புத்தெழுச்சி"

### செயற்பணி

இ லங் கைத் தொழில் முயற் சியாளர் கள ், தொழில் வல் லுனர் கள ், ஊழியப் படையணியினரை ஆற்றல்கள் மற்றும் வளங்களின் மூலம் பலமூட்டி, திட்டமிட்டு சுற்றாடலுக்குச் சாதகமான மற்றும் தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்தல் மற்றும் சமுதாயத்தின் பங்கேட்புடனான அடிப்படை வசதிகளைக் கொண்டுள்ள குடியிருப்புகளை உருவாக்கல், குறைந்த வருமானம் பெறும் மக்களை பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டுவதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்”

## 3. அமைச்சின் விடயப்பரப்பு மற்றும் பிரதான விடயப்பரப்புக்கள

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான கொள்கைகள், அபிவிருத்தித் திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ள உரிய நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுத்தல்

# 3.1 அமைச்சின் கீழுள்ள பிரதான விடயப்பரப்புக்கள வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு



## வீடமைப்பு

01.குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் உள்ளடங்களாக பொது மக்களின் வீடமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வீடமைப்பு நிதி உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.


02.சுற்றாடலுக்கு சாதகமானவாறு செலவினத்திற்கு ஏற்ற பயன்களைப் பெற்றுத்தருகின்ற வீடமைப்பு தொழில்நுட்ப முறைகள் பற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டல்.

03. வீடமைப்பு விடயம் தொடர்பான கொள்கைகள்,நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல

## நிர்மாணிப்பு

1. நிர்மாண விடயம் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், பின்னாய்வு, மதிப்பீடு செய்தல்.
2. 02. நிர்மாணக் கைத்தொழிலுக்கு ஆலோசனை மற்றும் ஒழுங்குபடுத்தும் சேவைகளை வழங்குதல் மற்றும் கனரக நிர்மாண உபகரணங்களை இயக்குவது மற்றும் பராமரிப்புச் செய்வது பற்றிய பயிற்சி.
3. 03. உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் நியமங்களுக்கு அமைய நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், பதிவு செய்தல், முறைப்படுத்தல் மற்றும் காப்படுக்கல்.

# 4. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பும், மனிதவளத் தோற்றப்பாடும





கண. – கணக்காளர்
பி.ப. – பிரதிப் பணிப்பாளர்
உ.செ. – உதவிச் செயலாளர்
ச.அ. – சட்ட அலுவலர்
நி.அ. – நிருவாக அலுவலர்
மொ. – மொழிபெயர்ப்பாளர்
அபி.அ. – அபிவிருத்தி அலுவலர்
தொ.அ. – தொழில்நுட்ப அலுவலர்
க.அ. – கனிய அளவையாளர்
மு.உ. – முகாமைத்துவ உதவியாளர்
சா. – சாரதி
அலு.சிற்.– அலுவலக சிற்றூழியர்

## 5. அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியண

| தொ. இல. | பதவி | சம்பள அளவுத் திட்டம் | ஏற்புடைய சேவை | அங்கீகரிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | ளுடு 4 | | 01 |
| 2 | மேலதிகச் செயலாளர் (நிருவாகம், நிதி) | ளுடு 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 3 | மேலதிகச் செயலாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | ளுடு 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 4 | மேலதிகச் செயலாளர் (தொழில்நுட்பம்) | ளுடு 3 | இ.பொ.சே. 1 | 01 |
| 5 | பிரதம நிதி அலுவலர் | ளுடு 3 | இ.க.சே. விசேட | 01 |
| 6 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) | ளுடு 1 | இ.நி.சே. 1 | 01 |
| 7 | பணிப்பாளர் (வீடமைப்பு) | ளுடு 1 | இ.நி.சே. 1 | 01 |
| 8 | பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) | ளுடு 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 9 | பணிப்பாளர் (திட்டமிடல்) | ளுடு 1 | இ.தி.சே. 1 | 01 |
| 10 | பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | ளுடு 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 11 | பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு அபிவிருத்தி) | ளுடு 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 12 | பிரதம கணக்காளர் | ளுடு 1 | இ.க.சே. 1 | 01 |
| 13 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | ளுடு 1 | இ.க.சே. 1 | 01 |
| 12 | வீடமைப்பு ஆணையாளர் | ளுடு 1 | - | 01 |
| 13 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (வீடமைப்பு) | ளுடு 1 | இ.நி.சே ஐஐ / ஐஐஐ | 02 |
| 14 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) | ளுடு 1 | இ.பொ.சே ஐஐ / ஐஐஐ | 01 |
| 15 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | ளுடு 1 | இ.தி.சே ஐஐ / ஐஐஐ | 01 |
| 16 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | ளுடு 1 | இ.பொ.சே ஐஐ / ஐஐஐ | 01 |
| 17 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | ளுடு 1 | இ.பொ.சே ஐஐ / ஐஐஐ | 01 |
| 18 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு அபிவிருத்தி) | ளுடு 1 | இ.நி.சே ஐஐ / ஐஐஐ | 01 |
| 19 | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | ளுடு 1 | இ.நி.சே ஐஐஐ | 03 |
| 20 | கணக்காளர் | ளுடு 1 | இ.க.சே ஐஐ / ஐஐஐ | 02 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | சட்ட அலுவலா் | ளுடு 1 | திணைக்கள | 01 |
| 22 | தகவல் தொடா்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலா் | ளுடு 1 | இ.த.தொ.சே.2.˙.ஐஐ | 01 |
| 23 | நிருவாக அலுவலா் | ஆே7 | அ.மு.உ.சே. (சிறப்புத்தரம்) | 01 |
| 24 | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளா் (தற்காலிக பதவியாகும்) | ஆே 6 | | 01 |
| 25 | மொழிபெயா்ப்பாளா் | ஆே6 | மொழிபெயா்ப்பாளா் சேவை | 02 |
| 26 | வரவுசெலவுத் திட்ட உதவியாளா் | ஆே 4 | இணைந்த அலுவலா் | 01 |
| 27 | வழங்கல் உதவியாளா் | ஆே 4 | இணைந்த அலுவலா் | 01 |
| 28 | அபிவிருத்தி உதவியாளா் | ஆே 4 | இணைந்த அலுவலா் | 25 |
| 29 | வீடமைப்பு அபிவிருத்தி உதவியாளா் | ஆே 4 | இணைந்த அலுவலா் | 11 |
| 30 | அபிவிருத்தி உதவியாளா் | ஆே 4 | இணைந்த அலுவலா் | 19 |
| 31 | முகாமைத்துவ உதவியாளா் | ஆே 4 | அ.மு.உ.சே. | 43 |
| 32 | தொழில்நுட்ப அலுவலா் | ஆவு 2 | இ.தொ.சே. | 05 |
| 33 | கனிய அளவையாளா் | ஆவு 2 | இ.தொ.சே | 01 |
| 34 | சாரதி | ˚டு 3 | சாரதி சேவை | 26 |
| 35 | அலுவலக சிற்றூழியா் | ˚டு 1 | அலுவலக சிற்றூழியா் சேவை | 26 |
| 36 | வீடியோ கேமரா (தற்காலிகம்) | | | 01 |
| 37 | இன்னும் புகைப்படக்காரர் (தற்காலிகம்) | | | 01 |
| 38 | அலுவலக உதவியாளர்கள் (தற்காலிகம்) | | | 01 |
| | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை | | | **193** |

# 6. அமைச்சின் ஒழுங்கமைப்பு



## 6.1 நிருவாகப் பிரிவு

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் அரசாங்கக் கொள்கைகளை அமுல்படுத்தும் போதும் பொது நலன்புரிக்காக மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு பணிகளின் போதும் அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் ஒத்துழைப்பினை வழங்கி அதற்குத் தேவையான வேலைச் சூழலை ஒழுங்குசெய்து கொடுத்தல் மனித வளம் மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனுடனும், உற்பத்தித் திறனுடனும் முகாமைத்துவம் செய்வது நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

### நிருவாக பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சில் சேவையாற்றுகின்ற சகல அலுவலர்களினதும் தாபான நடவடிக்கைகளை பேணி வருதல்.
2. அமைச்சின் சகல பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
3. அமைச்சின் வழங்கல் நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
4. அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் அமைச்சின் தலையீட்டின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சகல நிருவாக நடவடிக்கைகளும்.
5. அமைச்சின் பதவியணி சம்பந்தமான நடவடிக்கைகள்.
6. அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
7. அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.
8. உற்பத்தித் திறன் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
9. அமைச்சின் நடவடிக்கைகளுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
10. அமைச்சின் அலுவலர்களுக்கான பயிற்சித் தொடர்களை நடாத்தல்.

## 6.2 திட்டமிடல் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல் மற்றும் திட்டமிடப்பட்டவாறு முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு வழிநடாத்தல்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உரிய தரப்பினர்கள் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்தல்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறையின் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு நிறுவனங்களினால் தயார் செய்யப்படுகின்ற கருத்திட்டப் பிரேரணைகளை நிதி அமைச்சினூடாக அங்கீகரித்துக்கொள்ள உதவுவதும், அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சின் நோக்கு மற்றும் நோக்கங்களுக்கு ஏற்புடையதாக அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் செயல் ரீதியான திட்டத்தைத் தயார் செய்வது தொடர்பில் உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மாதாந்த மற்றும் வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய மதிப்பீடு செய்தல்.
3. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான தகவல்களைத் தயார் செய்வதும், அறிக்கையிடுவதும்.
4. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கருத்திட்டப் பிரேரணைகளை, தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமா்ப்பிப்பதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.
5. கருத்திட்டங்களை பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
6. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் சம்பந்தமான அமைச்சரவை தீா்மானங்களை அமுல்படுத்துவது பற்றிய பின்னாய்வை மேற்கொள்ளல்.
7. வருடாந்த முன்னேற்ற அறிக்கை, செயலாற்றுகை அறிக்கையைத் தயார் செய்தல்.
8. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை ஒழுங்குசெய்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.

## 6.3 வீடமைப்புப் பிரிவு

வீடமைப்புத் துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வீடமைப்பு அபிவிருத்தி துறையின் கீழ் தேசிய திட்டங்களை திட்டமிடல், திட்டங்களைத் தயார் செய்தல், வழிநடாத்தல், பின்னாய்வு, மற்றும் அத்துறையில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### வீடமைப்புப் பிரிவின் பிரதான பணிகள்

#### 1. கொள்கைகளை வகுத்தல்

- வீடமைப்புத் துறையின் முன்னேற்றத்துக்குத் தேவையான கொள்கைகளைத் தயார் செய்தல்.
- வீடமைப்புத் துறைக்கு ஏற்புடையதான கொள்கைகளை ஏனைய அரசதுறை நிறுவனங்களுடன் இணைந்து அமுல்படுத்தல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமுதாய அபிவிருத்தி.
- மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய வீடமைப்புக் குழுக்களைத் தாபித்தல்.
- உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் வீடமைப்பு, நிா்மாணிப்பு சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும், உலகக்

குடியிருப்புத் தினத்தைக் கொண்டாடுவதும்.

2. **காணிகள் பற்றிய கடமைகள்**

- வீடமைப்பு அபிவிருத்தி நோக்கங்களுக்கு காணிகளைச் சுவீகரித்தல்.'. பொறுப்பேற்றுக் கொள்வது சம்பந்தமான நடவடிக்கைகள்.
- வீடமைப்பு அபிவிருத்தித் தேவைகளுக்கு காணிகளை நீக்கம் செய்வது சம்பந்தமான நடவடிக்கைகள்
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 8(1) பிரிவின் கீழ் காணிகள்.'. வீடுகளுக்கான சட்ட ரீதியான உரித்தினை பொதுமக்களிடம் கையளித்தல்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான காணிகளில் சட்ட விரோதமாக வீடுகளை நிர்மாணித்து வசித்துள்ள வசிப்பாளர்களை அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய ஒழுங்குபடுத்தல்.

3. **வீடமைப்பு அபிவிருத்தி**

- நாட்டின் வீடமைப்புத் தேவைக்குப் பொருத்தமானவாறு வீடமைப்பு நிர்மாணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை மறுசீரமைத்தல்.
- வீடமைப்புக் கடன் உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- வீடமைப்புத் திட்டங்கள் சம்பந்தமான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைச் சமர்ப்பித்தல்.
- வேறு அரச நிறுவனங்களுடன் இணைந்து வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் வீடமைப்புக் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமுதாய அபிவிருத்தி.

## 6.4 தொழில்நுட்பப் பிரிவு

### 6.4.1 பொறியியல் சேவைகள் பிரிவு

"நிர்மாணிப்புக் கருத்திட்டங்களுக்கு நியாயமான மற்றும் தாங்கிக்கொள்ளக் கூடிய விலைகளை நிர்ணயிப்பதன் மூலம் ஒட்டுமொத்த நிர்மாணிப்புக் கைத்தொழிலின் மொத்த நிர்மாணிப்புச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவது மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு வெளிப்படைத் தன்மை மிக்க நியாயமான விலைகளுக்கமைய ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்க உதவுவதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன."

**பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதான பணிகள்**

1. அரசாங்க நிறுவனங்களின் நிர்மாணிப்பு சம்பந்தமான நிலையான தொழில்நுட்பக்

குழுவின் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் வழங்கல் குழுக்களை நியமனம் செய்தல்.
3. ஒப்பந்த வித்தியாசங்களுக்கு அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.
4. அமைச்சின் வழங்கல் குழுவின் தீர்மானங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
5. ஒப்பந்ததாரர்கள் சம்பந்தமான நிர்மாணிப்புத் துறைக்குரிய தரவுக் கட்டமைப்பு மற்றும் நிர்மாணிப்புத் துறை சம்பந்தமான விலைகள் பற்றிய தரவுக்கட்டமைப்பைப் பேணிவருதல்.

### 6.4.2 நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவு

“சுற்றாடலுக்குச் சாதகமான, தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்கு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிநடாத்துவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

#### நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவின் பிரதான பணிகள்

1. நிர்மாணிப்புத் துறையுடன் இணைந்துள்ள நிர்மாணிப்பு மற்றும் பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை நிர்மாணிப்புக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக வழிநடாத்தல்.
2. நிர்மாணத் துறைக்குத் தேவையான ஊழியப் படையைத் தயார் செய்தல்.
3. தொழில் வல்லுனர்கள், நிர்மாணிப்புக் கலைஞர்களை திறமையும் அறிவும் மிக்கவர்களாக்குதல் மற்றும் தரமான நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்காக அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிநடாத்தல்.
4. தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

### 6.4.3 நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவு

“பிரதானமாக நகர்ப் பிரதேசங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுகின்ற மக்கள் மற்றும் ஏனைய மக்களுக்குத் தேவையானவாறு வசிப்பதற்கு ஆற்றல் உள்ள வசதிகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதை வழிநடாத்தல் மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தியானது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.”

#### நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவின் பிரதான பணிகள்

1. நகரக் குடியிருப்பு கருத்திடட்ங்களை இனங்காணல் மற்றும் அமுல்படுத்துவதற்கு, உரிய நிறுவனங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்கள்.
2. நகரக் குடியிருப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

## 6.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

இந்தப் பிரிவு 1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுகின்றது. அவ்வாறே,

1972 இன் 7 ஆம் இலக்க வாடகைச் சட்டத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சில பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது.

“மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரதான நோக்கங்களான வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக இந்தப்பிரிவு செயற்பட்டுவருகிறது.

### தேசிய வீடமைப்பு ஆணையாளர் நிதிப் பிரிவின் பிரதான பணிகள்

1. வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
2. அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குதல்.
3. பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகள் தொடர்பில் எழுகின்ற சிக்கல்களைத் தீர்த்துவைத்தல்.

## 6.6 நிதிப் பிரிவு

“அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்புடையதாகின்ற நோக்கங்களை அடைந்துகொள்ளத் தேவையான நிதி வளம் மற்றும் ஆலோசனையைப் பெற்றுக்கொடுத்தல், மேற்படி வளங்களைப் பயன்மிக்கவாறும், வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி ஆலோசனை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.”

### நிதிப் பிரிவின் பிரதான பணிகள்

1. நிதி பற்றித் திட்டமிடல்.
2. வரவுசெலவுத் திட்டமிடல்
3. நிதியைப் போதியளவு, உரிய நேரத்திற்குப் பெற்றுக்கொள்ளல்.
4. அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நிதி வழங்குதல் மற்றும் செலவிடல்.
5. சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு செலவினம் மற்றும் நிதி முன்னேற்றம் பற்றி உரிய திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் அறிக்கையிடல்.

## 6.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் உத்தேச நோக்கங்களை யதார்த்தமாக மாற்றியமைத்துக் கொள்வதற்காக சிறந்த நிதி நிருவாகம் மற்றும் முறையான முகாமைத்துவத்தை தாபிக்கச் செயற்படல்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் நிதி நிருவாகம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்கேற்று அந்த நடவடிக்கைகளை மென்மேலும் முறையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்காக முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து உதவுதல்

### உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுப் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சிக்கல்களை குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.
3. கணக்காய்வு மற்றும் விசாரணை நடவடிக்கைகளின் மூலம் நிறுவனங்களிலுள்ள சிக்கல்களை குறைத்துக் கொள்ள உதவுதல்.
4. அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மற்றும் அரச கணக்குகள் பற்றிய குழுவின் சிபாரிசுகள் மற்றும் கட்டளைகளை அமுல்படுத்துவது தொடர்பில் பின்னாய்வை மேற்கொள்ளல்.

## 7 அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள

### 7.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படை வசதிகளைக் கொண்ட பாதுகாப்பான வீடொன்றை உரித்தாக்கிக் கொடுக்கும் நோக்கத்துடன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை செயற்பட்டு வருகின்றது. குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் வீடமைப்புத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதை ஊக்குவித்தல், வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் பொருளாதார சுபீட்சத்தை அடையச் செய்வதற்காக 1979 இன் 17 ஆம் இலக்க “தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபை” சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், இன்று வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் 25 மாவட்டங்களிலும் அலுவலகங்களைக் கொண்டுள்ளதுடன், கொழும்பு நகரின் தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக 2 உப அலுவலகங்களையும் கொண்டுள்ளது

### 7.2 நகர குடியிருப்பு அதிகாரசபை

நிலைபேறான நகரக் குடியிருப்புக்களில் பெருமைமிகு வாழ்க்கையொன்றை உறுதிசெய்யும் நோக்கத்துடன், குறைந்த வசதிகளைக் கொண்ட நகர்ப்புற குடியிருப்புக்களைச் சூழ வாழும் சமுதாயத்தினருக்கு வீடமைப்புத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல், சமுதாயத்தை பொருளாதார மற்றும் சமூக, கலாசார ரீதியில் வலுவூட்டல் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் போன்ற பணிகளுக்காக 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கமைய இந்த அதிகார சபை தாபிக்கப்பட்டது.

### 7.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

கூட்டாட்சி ஆதனங்களில் வசிக்கின்றவர்களின் பயன்கள் மற்றும் நலன்புரிக்கு பொருத்தமானவாறு நிர்மாணிப்புகள் மற்றும் மேற்படி ஆதனங்களை முறையாக நிருவகித்தல் மற்றும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை பாதிப்புத் ஆதனங்களைப் பராமரிப்புச் செய்தல் ஆகிய பணிகளை ஒழுங்குறுத்துவதற்காக 2003 இன் 24 ஆம் இலக்க பொதுவசதிகள் சபை (திருத்தச்) சட்டத்தின் மூலம் ஒழுங்குறுத்தும் அதிகார சபையொன்றாக கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை தாபிக்கப்பட்டது. மேலும் 1982 இன் 45 ஆம் இலக்க, 2003 இன் 39 ஆம் இலக்கச் சட்டங்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் நியமங்களை ஒழுங்குறுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

### 7.4 ஓ‘ன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி

இலங்கையின் ஆதன அபிவிருத்திச் சந்தையின் முன்னோடி ஆதன அபிவிருத்திக் கம்பனியாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிப் பதிவுச் சட்டத்தின் கீழ் தனியார் கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு இலக்கம் ீஏ 17667). பின்னர் இது 2007 இன் 07 ஆம் இலக் கம்பனிப் பதிவுச் சட்டத்திற்கு அமைய மீளப் பதிவு செய்யப்பட்டது.

தனியார் கம்பனி என்றவகையில் வினைத்திறனை பிரதானமாகக் கொண்ட இந்தக் கம்பனி இன்று வீடமைப்புத் துறையில் குறிப்பிடத்தக்களவான மாற்றத்தை ஏற்படுத்தி வீடமைப்புத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

## 7.5 வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

1849 ஆம் ஆண்டு அரசாங்க வேலைகள் திணைக்களம் ஆக ஆரம்பிக்கப்பட்ட கட்டிடத் திணைக்களம் 1969 இல் “ஏ” தரத்தைச் சேர்ந்த திணைக்களமொன்றாக தாபிக்கப்பட்டதுடன், அரசாங்க வேலைவகள் திணைக்களம் இல்லாதொழிக்கப்பட்டதை அடுத்து, அரசாங்க கட்டிட நிர்மாணத் துறையிலுள்ள ஒரே அதிகார அமைப்பாகவும், ஆலோசனை நிறுவனமாகவும் கருதப்படுகின்றது.
மாவட்ட பொறியியல் அலுவலகங்கள் 27 இன் மூலம் நாடு முழுவதிலும் கட்டிடக் கலை ரீதியாக மற்றும் பொறியியல்சார் நிர்மாணிப்புக்கள், நிர்மாணிப்பு, பராமரிப்புச் செய்தல், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் அரச துறையின் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக சிறந்ததொரு சேவையை ஆற்றிவருகின்றது.

## 7.6 அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்

அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இயந்திரப் பொறியியல் துறையில் உலோக மற்றும் தச்சுக் கைத்தொழில்சார்ந்த வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகிக்கும் பணிகள் மற்றும் இயந்திரப் பொறியியலாளர்களுக்கு வேலைத்தளங்களின் உற்பத்தி மற்றும் வேலைகள் சம்பந்தமான செயன்முறைப் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் அரசாங்க தொழில்சாலை திணைக்களம் செயற்பட்டு வருகின்றது.

## 7.7 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்த அதிகார சபை தாபிக்கப்பட்டது. நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல், பதிவுசெய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்துவது இந்தச் சட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.
நிர்மாணக் கைத்தொழிலுக்கான தேசிய சபையொன்றைத் தாபித்தல், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல், நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான தொழில் வல்லுநர்கள், உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கலைஞர்களின் அபிவிருத்தி மற்றும் நலன்புரிக்கான ஏற்பாடுகளைச் செய்தல், நிர்மாண நடவடிக்கைகள் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்துவைத்தல், நிர்மாணக் கைத்தொழில் துறையில் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்தல் போன்ற பணிகளுக்காக அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

## 7.8 அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் பேணி வரப்படுகின்ற பகுதியளவான அரச நிறுவனமொன்றாகும்.

நிர்மாணிப்புத் துறையின் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், பொறியியல் சேவையை வழங்குதல், நிர்மாணிப்பு இயந்திர சாதனங்களை வழங்குதல், திட்டங்களை வடிவமைத்தல், முன்வலுவூட்டப்பட்ட கொன்க்றீட் அம்சங்களை உற்பத்தி செய்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சி

நடவடிக்கைகள் போன்ற பணிகளை இந்நிறுவனம் நிறைவேற்றுகின்றது.

2009 ஆம் ஆண்டு முதல் ஐளுழு 9001:2000 தரச்சான்றிதழையும், ஐளுழு 14001:2004 சுற்றாடல் முகாமைத்துவச் சான்றிதழையும் பெற்று நிர்மாணத் துறையில் முன்னோடி நிறுவனமொன்றாக செயற்பட்டு வருகின்றது.

## 7.9 தேசிய இயந்திர சாதன நிறுவனம்

அரசாங்க நிறுவனங்களுக்கு மண் முங்கால் இடல் இயந்திரசாதனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் தேசிய இயந்திரசான நிறுவனம் 1992 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் இயந்திர சாதனப் பிரிவாக தேசிய இயந்திர சாதன நிறுவகம் அதன் கீழ் கொண்டுவரப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் மற்றொரு அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கீழேயே முகாமைத்துவ சபையின் கீழ் இயங்கிவருகின்றது.
வனசீவராசிகள், மிருகக் காட்சிசாலைகள், நீர்ப்பாசனம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் புகையிரதத் திணைக்களத்தினால் கையளிக்கப்பட்ட விசேட ஒப்பந்தங்களுடன் தேசிய இயந்திரசாதன நிறுவனமானது, படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகின்றது. அச்சுத் தொழில்வல்லுனர்கள், பயிற்றப்பட்ட ஊழியர்கள், தொழிலாளர் மட்டத்திலான ஊழியர்கள் 609 பேரைக் கொண்ட பதவியணியினர் இதில் சேவையாற்றுகின்றனர். மேலும், கனரக இயந்திர சாதனங்களைக் கொண்டதாகவும், நாடு முழுவதிலும் சகல மாவட்டங்களிலும் சேவை வழங்கும் டிப்போக் கட்டமைப்புக்களைக் கொண்டதாகவும், ஒவ்வொரு மாகாணத்திலும் அமைந்துள்ள சகல வசதிகளையும் கொண்ட இயந்திர வேலைத்தளங்களைக் கொண்டதாகவும் உள்ளது.

## 7.10 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்

1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1971 ஒக்டோபர் 01 ஆம் திகதி பொறியியல் நிறுவனமொன்றாகத் தாபிக்கப்பட்டதுடன் தற்போது வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

முதற்தர பொறியியல் நிறுவனம் என்ற வகையில் பாலங்கள், பெருந்தெருக்கள், கட்டிடங்கள், சுரங்கப் பாதைகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் போன்றவற்றைத் திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதன் மூலம் இந்த நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பினை வழங்கி வருவதுடன் பாலங்களை நிர்மாணித்தல் தொடர்பில் இலங்கையிலுள்ள முக்கிய நிறுவனமாகவுள்ளது. அவ்வாறே சுரங்கப் பாதைகளை நிர்மாணிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ள ஒரே இலங்கை நிறுவனமும் இந்தக் கூட்டுத்தாபனமாகும்.

நிர்மாணப் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் இந்தக் கூட்டுத்தாபனம் ஊ1 தரத்தைச் சேர்ந்த நிர்மாணிப்பு நிறுவனமாக பதிவு வழங்கப்பட்டுள்ளதுடன் மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிர்மாணிப்புச் செயலாற்றுகை பற்றிய விருதையும் பெற்றுள்ளது.

ஐளுழு 9001:2008 தரச்சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ள இக்கூட்டுத்தாபனம் நிர்மாணிப்புகளை உரிய தரநியமங்களுக்கு அமைவாகவே மேற்கொண்டு வருகின்றது.

பொறியியல் பணிகளுக்குத் தேவையான முன் வலுவூட்டப்பட்ட முன்பூர்த்தி செய்யப்பட்ட கொன்க்றீட் பாலங்கள், மின் கம்பங்கள், ஏனைய முன்பூர்த்தி செய்யப்பட்ட அம்சங்கஙளயும் உற்பத்தி செய்கின்றது. அத்துடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சகல வீதி சமிஞ்கசக் கட்டமைப்புக்களையும் பராமரித்தல் மற்றும் புதிய கட்டமைப்புக்களை உருவாக்கும் பணிகளையும் கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருகின்றது.

## 7.11 கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் 1971 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இதனையடுத்து 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வர்த்தக நிறுவனங்களை பொதுக்

கொண்டு பொதுக் கம்பனியாக இந்தக் கூட்டுத்தாபனம் மாற்றியமைக்கப்பட்டது.
2007 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. மீண்டும் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2007 இன் கம்பனிகள் சட்டத்தின் 07 ஆம் இலக்கத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டது.

கட்டிடப் பொருட்கள் மற்றும் நிர்மாணிப்பு உபகரணங்களை போட்டித்தன்மைமிக்க விலையில் நாடு முழுவதிலும் வழங்குகின்ற முன்னோடி அரச நிறுவனம் என்ற வகையில் சமுதாயத்தின் நம்பிக்கையை வென்று, அரச நிறுவனம் என்ற வகையில் சமூகப் பொறுப்பை நிறைவேற்றி வருகின்றது.

# 8. நிதி ஏற்பாடுகள

2017 ஆம் ஆண்டு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த நிதி ஏற்பாடுகள் மற்றும் மேற்படி நிதி ஏற்பாடுகளின் 2017.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் பின்வருமாறு.

## ➢ அமைச்சின் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 436,606,000.00 | 683,978,131.00 | 681,823,650.00 |
| மூலதனச் செலவினம் | 2,323,650,000.00 | 6,849,150,000.00 | 6,849,149,973.00 |
| | **2,760,256,000.00** | **7,533,128,131.00** | **7,530,973,623.00** |

## ➢ நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய

**நிகழ்ச்சித்திட்டம் 1 – செயற்பாட்டு நடவடிக்கைகள்**

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 226,116,000.00 | 467,943,131.00 | 467,812,650.00 |
| மூலதனச் செலவினம் | 11,450,000.00 | 11,650,000.00 | 11,649,974.00 |
| | **237,566,000.00** | **479,593,131.00** | **479,462,624.00** |

**நிகழ்ச்சித்திட்டம் 2 – அபிவிருத்தி நடவடிக்கைகள்**

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 210,490,000.00 | 216,035,000.00 | 214,011,000.00 |
| மூலதனச் செலவினம் | 2,12,200,000.00 | 6,837,500,000.00 | 6,837,500,000.00 |
| | **2,522,690,000.00** | **7,053,535,000.00** | **7,051,511,000.00** |

# அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு

**கணக்கு இல.** - **123011**
- **123012**

**அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள்**

| | |
|---|---|
| - செலவின உச்ச வரையறை | ரூ. 11,000,000.00 |
| - பெறுகைகளின் ஆகக் குறைந்த வரையறை | ரூ. 5,500,000.00 |
| - வரவு நிலுவையின் உச்ச வரையறை | ரூ. 45,000,000.00 |

**ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொண்டு சென்ற மீதி (2017.01.01) ரூபா 23,581,143.50**

| | | | |
|---|---|---|---|
| **ஆண்டினுல் வரவு வைத்தல்** | 23011 | ரூபா | 10,968,902.50 |
| | 123012 | ரூபா | 1,756,853.00 |
| **ஆண்டினுள் செலவு வைத்தல் -** | 123011 | ரூபா | 8,202,908.32 |
| | 123012 | ரூபா | 4,097,512.00 |

**ஆண்டின் இறுதியில் மீதி (2017.12.31) ரூபா 24,006,478.68**

# 2017 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்திக கருத்திட்டங்கள் சில



விபத்துக்கு ஆளான பாடசாலை மாணவா் ஒருவரின் வீடமைப்பு சிக்கலைத் தீர்க்க பங்களிப்பு



சூரியவெவ சொமிரிவிகம திட்டத்த திறந்துவைத்தல



வட மாகாண வீடமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் மாதிரிக் கிராமம் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டல்



மெய்வல்லுனா் வீராங்கனை ஒருவரின் வீடமைப்புச் சிக்கலை தீர்க்கும் வகையில் வீட்டின் உரிமையை உறுதி செய்தல.



சில்ப சவிய நிர்மாணக் பயிற்றுவித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உபகரணத் தொகுதிகளை வழங்கிவைத்தல்




2017 உலக குடியிருப்புத் தினக் கொண்டாட்டம்

# 9. 2017 ஆம் ஆண்டுக்குரிய அமைச்சின் முன்னேற்றம

## 9.1 நிருவாகப் பிரிவு

### ❖ அமைச்சின் பதவியணி

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஒட்டுமொத்த பதவியணி 193 ஆகும் என்பதுடன், ஆண்டினுல் புள்ளிவிபரவியல் அலுவலர் பதவி மற்றும் இலங்கை நிருவாக சேவைக்கு உரித்தான உதவிச் செயலாளர் பதவி ஒன்றை அங்கீகரித்துக் கொள்ள அமைச்சுக்கு முடியுமாயிற்று. மேலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பதவியணி மீளாய்வு அறிவுரைகளுக்கு அமைய இந்த அமைச்சுக்கு இலங்கை திட்டமிடல் சேவைக்குரிய புதிய உதவிச் செயலாளர் பதவியொன்றையும், இலங்கை கணக்காளர் சேவைக்கு உரித்தான உள்ளக கணக்காய்வாளருக்கான புதிய பதவியொன்றையும் ஏற்படுத்திக்கொள்ளத் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மேற்படி பதவிகளை 2018 ஆம் ஆண்டினுள் அங்கீகரித்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அமைச்சினுள் சேவையாற்றிய ஒட்டுமொத்த பதவியணியினர் 148 பேராகும் என்பதுடன், இது 2016 ஆம் ஆண்டில் 150 ஆக இருந்தது.

### ❖ பதவியணி வெற்றிடங்கள்

அமைச்சின் பதவிநிலை தரத்தைச் சேர்ந்த பதவிகளான மேலதிக செயலாளர் (நிருவாகம்), சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) மற்றும் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) ஆகிய பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை 2017 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்துகொள்ளும் ஆற்றல் அமைச்சுக்கு கிடைத்தது.

பிரதம நிதி அலுவலர், பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) மற்றும் பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு) ஆகிய பதவிகளில் சேவையாற்றிய அலுவலர்கள் ஓய்வு பெற்றமை காரணமாக மேற்படி பதவிகளில் வெற்றிடம் ஏற்பட்டதுடன், இலங்கை நிருவாக சேவையின், இலங்கை பொறியியலாளர் சேவையின் மற்றும் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் ஐஐஐ ஐச் சேர்ந்த அலுவலர்களின் பற்றாக் குறை காரணமாக அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர் (வீடமைப்பு, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் கணக்காளர் ஆகிய பதவிகள் இந்த ஆண்டின் இறுதியிலும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

2017 ஆம் ஆண்டின் இறுதியில் அமைச்சின் ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 45 ஆகக் காணப்பட்டதுடன், இது 2016 ஆம் ஆண்டில் 40 ஆகக் காணப்பட்டது.

- **அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் பாராளுமன்ற வினாக்களும்**

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை ஆகிய விடயப்பரப்பிற்கு உரித்தானதாக இந்த அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்கு 2017 ஆம் ஆண்டில் அமைச்சினால் 47 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக 13 அமைச்சரவைக் குறிப்புகளும் இந்த ஆண்டில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்படுள்ளன.

மேலும் அமைச்சின் விடயப்பரப்புக்கு உரித்தான விடயங்கள் சம்பந்தமாக 2017 ஆம் ஆண்டில் பாராளுமன்ற வினாக்கள் 09 கேட்கப்பட்டிருந்ததுடன், மேற்படி அனைத்து வினாக்களுக்கும் பதில் அனுப்ப அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

- **பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளுதல்**

இந்த அமைச்சு தொடர்பில் பிரதானமாக பொதுமக்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது வீடமைப்புத் துறை சம்பந்தமான கோரிக்கைகள் தொடர்பிலாகும் என்பதுடன் ஊழியர்களின் சிக்கல்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் சிக்கல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. குறிப்பாக, ஜனாதிபதி அலுவலகம், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் பொது மனுக் குழு ஊடாகவும் மேற்படி கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இவ் அனைத்துக் கோரிக்கைகள் தொடர்பிலும் தலையீடு செய்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமைச்சு தாமதிக்காது செயற்பட்டுள்ளதுடன், நிறுவனங்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் தொடர்பிலான சிக்கல்களுக்கு அமைச்சின் தலைமையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **பயிற்சி மற்றும் உற்பத்தித் திறன் செயற்பாடுகள்**

அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் அமைச்சில் சேவையாற்றுகின்ற சகல அபிவிருத்தி அலுவலர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களையும் உள்ளடக்கும் வகையில் அலுவலக முறைமை, வியட ரீதியான நடவடிக்கை முறைகள் பற்றி அறிவுறுத்துவதற்கான பயிற்சிச் செயலமர்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டதுடன், சகல பதவி நிலை அலுவலர்களுக்கும் ஊழியர் ஊக்குவிப்புக்கான செயலமர்வொன்று வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

அத்துடன் அமைச்சின் அலுவலர்களின் தமிழ் மொழித் தேர்ச்சியை வளர்த்துக் கொள்வதற்கான தமிழ் மொழி உதவி வகுப்புக்களை நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், பல்வேறு பயிற்சி நிறுவனங்களினாலும் நடாத்தப்படுகின்ற

பயிற்சிப் பாடநெறிகளில் அலுவலர்கள் 22 பேரை பங்கேற்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அரச தொழில் பயிற்சி நிறுவனங்களின் பாடநெறிகளை பூர்த்தி செய்த பின்னர் பயிற்சி பெற எதிர்பார்க்கின்ற பயிலுனர்கள் 20 பேருக்கு அமைச்சினால் அவர்களின் பயிற்சிப் பாடநெறி சம்பந்தமான செயன்முறைப் பயிற்சி வழங்கவும் இந்த ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 9.2 திட்டமிடல் பிரிவு

### ❖ வருடாந்த செயற்றிட்டம் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்

ஒவ்வொரு வருடமும் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் சம்பந்தமான செயற்பாடுகளையும் மதிப்பீடுகளையும் உள்ளடக்கியதாக வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்படுவதுடன், 2017 ஆம் ஆண்டுக்கும் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்கள் சம்பந்தமான வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்பட்டது.

வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படுவதை அவதானித்தல் மற்றும் மதிப்பீடு செய்யவென விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சரின் தலைமையில் 34 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களும், அமைச்சின் செயலாளரின் தலைமையில் வீடமைப்பு மற்றும் தொழில்நுட்பத் துறை தொடர்பிலான 10 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களும் 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டதுடன், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான வழிகாட்டல்களை பெற்றுக்கொடுக்க இதன் மூலம் வாய்ப்புக் கிடைத்தது.

### ❖ முன்னேற்ற அறிக்கைகள்

தேசிய வரவு செலவுத்திட்டதத் திணைக்களத்திற்கு மாதாந்த அடிப்படையிலும், கருத்திட்ட முகாமைத்தும் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு காலாண்டு அடிப்படையிலும், சனாதிபதி செயலகம் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு மாதாந்த அடிப்படையிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முன்னேற்ற அறிக்கைகளை உரிய காலப்பகுதிகளுக்குள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக நிறுவுனங்களின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு அறிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்யவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### ❖ புதிய கருத்திட்டப் பிரேரணைகள்

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலம் 2017 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப்

பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை சம்பந்தமாக அமுல்படுத்த திட்டமிட்டுள்ள 23 கருத்திட்டப் பிரேரணைகளை திரைசேரியிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க அமைச்சுக்கு முடியுமாயிற்று.

❖ **அமைச்சின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை**

ஒவ்வொரு வருடமும் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் போது சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை இந்த ஆண்டும் அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் கருத்திட்டப் பிரேரணைகள், திட்டங்களுடன் தயார் செய்யப்பட்டு உரிய நேரத்திற்குள் சமர்ப்பிக்க அமைச்சுக்கு இயலுமாயிற்று.

❖ **அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்.**

ஒரு மாவட்டத்திற்கு ஒரு கருத்திட்டம் என்ற வகையில் 25 மாவட்டங்களிலும் 600 வீடுகளை நிர்மாணிப்பதற்கான யாவருக்கும் புகலிடம் கிராம சக்தி மாதிரிக் கிராமம் வீடமைப்புக் கருத்திட்டத்திற்கு இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய இதற்கு ரூ.மி. 300 கிடைக்கப்படவுள்ளது.

மேலும் தென் மாகாணத்தில் 600 வீடுகளை நிர்மாணிக்கின்ற யாவருக்கும் புகலிடம் கிராம சக்தி மாதிரிக் கிராமம் கருத்திட்டத்திற்கும் 2017 அக்டோபர் மாத் 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய மேலும் 300 மி.ரூ. உதவித் தொகை கிடைக்கவுள்ளது.

அநுராதபுரம் விலச்சிய பிரதேச செயலாளர் பிரிவில் எலபத்கமவில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித்த நாஹிமிகம கருத்திட்டத்திற்கு இந்திய அரசினால் ரூ.மி. 296.50 ஆன அன்பளிப்பின் மூலம் 153 குடும்பங்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தல், பல்தேவைக் கட்டிடமொன்றையும், பிக்குமாருக்கான தங்குமிடம் மற்றும் உணவு உட்கொள்ளும் மண்டபம் என்பவற்றை நிர்மாணித்தல், நூலகத்தை நவீனமயப்படுத்தல், நீர் விநியோகம், கிராமிய வாவியொன்றை நிர்மாணித்தல் போன்ற பல்வேறு அபிவிருத்தி பணிகளில் இந்த நிதி உதவியை ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 9.3 வீடமைப்புப் பிரிவு

❖ **பொது மக்களின் கோரிக்கைகள்**

2017 ஆம் ஆண்டில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட பொது மக்களின் 2757 கோரிக்கைகள் விடயரீதியான சம்பந்தப்பட்ட

நிறுவனங்களிடம் சமா்ப்பிக்கப்பட்டு அது தொடா்பில் விண்ணப்பதாரா்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

மேலும், “சனாதிபதிக்குக் கூறுங்கள்” இன் கீழ் கிடைத்திருந்த 1895 முறைப்பாடுகள் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களிடம் சமா்ப்பிக்கப்பட்டு, மேற்படி முறைப்பாடுகளை சமா்ப்பித்திருந்த தரப்பினா்களுக்கு அதனை அறிவிப்பதற்கும், தொலைபேசி ஊடாக பொது மக்கள் சமா்ப்பித்த பல்வேறு தவல்கள் பற்றிய 1200 கோரிக்கைகள் சம்பந்தமான விபரங்களைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### ❖ சட்டங்களைத் திருத்தியமைத்தல்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டம் சம்பந்தமான திருத்த வரைவுக்கு சட்ட மாஅதிபரின் சிபாரிசைப் பெற்றுக் கொண்டு சட்ட வரைஞா் திணைக்களத்திடம் சமா்ப்பிக்கப்பட்டது. மேலும் 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் திருத்தம் தொடா்பிலான பிரேரணை சட்ட மாஅதிபரிடம் சமா்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 1973 இன் 10 ஆம் இலக்க கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை சட்டத்திற்கென தயாா் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகள், 2017.07.05 ஆம் திகதிய 2026/25 ஆம் இலக்க அதிவிசேட வா்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

### ❖ கொள்கைகளை வகுக்கும் பணிகள்

வீடமைப்புத் தேவை தொடா்பாக மேற்கொள்ளப்பட்ட நாடளாவிய ரீதியிலான தரவு ஆய்வுக்கு அமைய தயாா் செய்யப்பட்ட இறுதி ஆய்வு அறிக்கையானது, 87 பக்கங்களைக் கொண்டதாக மும்மொழிகளிலும் 1200 பிரதிகள் அச்சிடப்பட்டு சகல பாராளுமன்ற உறுப்பினா்கள் உட்பட சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சா்வதேச வீடமைப்பு ஆண்டின் 30 ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு மற்றும் காலத்தின் போக்குகள் மற்றும் சவால்களுக்கு அமைவாக செயற்பட்டு தேசிய வீடமைப்புக் கொள்கையைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இதற்காக நியமனம் செய்யப்பட்ட அறிஞா் குழுவினால் சமா்ப்பிக்கப்பட்ட தேசிய வீடமைப்புக் கொள்கையின் இறுதி வரைவு கௌரவ அமைச்சரவையில் சமா்ப்பிக்கப்பட்டது. மேற்படி வரைவானது, திருத்தங்களுக்கு உட்பட்டு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய திருத்திய வரைவு மீண்டும் கௌரவ அமைச்சரவையிடம் சமா்ப்பிக்கப்பட்டது.

வீடமைப்புப் பிரிவு தொடா்பாக 2017 ஆம் ஆண்டில் 22 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் குறிப்புக்கள் சமா்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமாக வேறு அமைச்சுக்களினால் சமா்ப்பிக்கப்பட்ட 30 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடா்பில்

அவதானிப்புக்களை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் வீடமைப்பு அபிவிருத்தித் துறை தொடர்பில் கௌரவ அமைச்சரிடம் வாய்மூலம் வினவும் வினாக்களுக்கான விடைகளும் தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டன.

❖ **உரித்து அல்லது உரிமையை பொறுப்பளித்தல்.**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 8(1) பிரிவின் கீழ் காணிகள் அல்லது வீடுகளின் சட்டரீதியான உரித்தை நீக்கம் செய்வது தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் பயனாளிகள் 1857 பேருக்கு உறுதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், அரசாங்கத்திற்கு உரித்தான கூட்டாட்சி மற்றும் கூட்டாட்சி அல்லாத ஆதனங்களின் உரித்தை அவற்றில் நீண்டகாலமாக வசிக்கின்ற வசிப்பாளர்களுக்குச் சாட்டுதல் செய்வதற்கு உகந்த பொறிமுறையொன்றை தயார் செய்வதற்காக செயலணியொன்று அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான பதவியணிக்கு ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் தவிர 15 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் அரசாங்கத்திற்கு உரித்தான ஆதனங்களில் தொடர்ச்சியாக வசித்து வருகின்ற குடியிருப்பாளர்கள் பற்றிய தகவல்கள் பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது சம்பந்தமான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுடன் இணைந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

❖ **வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் பிரதானமான நிறுவனங்களாகும் என்பதுடன், யாவருக்கும் புகலிடம், மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம், விரு சுமிதுரு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், சொந்துரு பியச வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், வட மாகாண வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், மணலாறு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், சிறுநீரக நோயாளர்களுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராம சக்தி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆகியன இவற்றில் முக்கியமானவையாகும்.

யாவருக்கும் புகலிடம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரை 49290 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

விரு சுமிதுரு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 488 புதிய வீடுகள் மற்றும் 425 மேம்படுத்தப்பட்ட வீடுகள் எனும் இலக்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 182 புதிய

வீடுகளும், 51 மேம்படுத்தப்பட்ட வீடுகளும் எனும் இலக்கை அடைந்துகொள்ள முடிந்தது. இதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ரூ.மி. 170.128 பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டது. பயனாளிகளைத் தெரிவு செய்துகொள்ளும் போது எழுந்த சிக்கல்கள் காரணமாக உத்தேச இலக்கை அடைந்துகொள்ள முடியவில்லை.

சொந்துரு பியச வீடமைப்பு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன் வழங்குவது மேற்கொள்ளப்படுவதுடன், கடன் வழங்கும் பிரதான தகவுதிறனாக இருப்பது வீட்டின் பரப்பளவை 750 சதுர அடிகளில் இருந்து 1000 சதுர அடிகள் வரை விஸ்தரிப்பதாகும் என்பதுடன், இதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 19595 விண்ணப்பங்கள் வங்கிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டு 4170 விண்ணப்பங்கள் தொடர்பில் 2017 ஆம் ஆண்டில் கடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் 3671 மாதிரிக் கிராமங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராம சக்தி மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் 1304 வீட்டு அலகுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **கிராமிய வீடமைப்புக் குழுக்களைத் தாபித்தல்**

நாடு முழுவதிலும் அமைந்தள்ள கிராம அலுலவர் பிரிவுகள் 14023 இல் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் 9565 கிராம அலுவலர் பிரிவுகளில் கிராமிய வீடமைப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

## 9.4 நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவு

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பிலான தொழில்சார் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சகல சட்ட வரைவுகளையும் திருத்தியமைத்து சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மேற்படி நிறுவனங்களின் ஏனைய சிக்கல்கள் சம்பந்தமாக உரிய காலப்பகுதிகளுக்குள் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் 17 தொடர்பில் இந்த ஆண்டினுள் அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சுக்கு நிர்மாணிப்பு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற வீசா கோரிக்கைகள் தொடர்பில் வெளிநாட்டு தொழில்வல்லுனர்கள் 22 பேர் மற்றும் நேபாள ஊழியர்கள் 89 பேருக்கு 2017 ஆம் ஆண்டில் சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

நிர்மாணக் கைத்தொழில் சபை சட்டம் தொடர்பில் அவதானிப்புச் செய்வதற்கு சட்ட மாஅதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், கட்டிடங்கள் சேவைகள் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்தை கூட்டிணைப்புச் செய்யும் சட்டத்துக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் அவதானிப்புக்கள் கோரப்பட்டுள்ளன.

"ழடஉைஉல ழக ர்பைா சளைந டீரடைனலைெ மற்றும் அது தொடர்பிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கான ஆரம்ப வரைவு

பிரதம அமைச்சர் அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 9.4.1 நகரக் குடியிருப்புப் பிரிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை, நிர்மாண அபிவிருத்தி அதிகார சபை, கட்டிடத் திணைக்களம் மற்றும் அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் மூல் 2017 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட 21 கருத்திட்டப் பிரேரணைகள் தொடர்பில் ஆரம்ப ஆய்வுகள் நடாத்தப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதற்காக திட்டமிடல் விரிவிடம் பொறுப்பளிக்கப்பட்டது.

## 9.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு சொத்தாண்மை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்குச் பொறுப்பேற்கப்பட்ட வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொக்கும் கருத்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உறுதிகளின் எண்ணிக்கை 09 ஆகும். அதற்கமைய 19 விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், 18 வெளிக்கள விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளன.

பொறுப்பளிக்கப்பட்டுள்ள வீட்டு ஆதனங்கள் தொடர்பிலான உறுதிகள் கனிசமானளவு வெளியிடப்பட்டுள்ளதுடன், 17,842 பொறுப்புப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குவதும் பாரியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

பல்வேறு வீட்டு ஆதனங்கள் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்களின் பொது உரிய ஆரம்க கோப்புக்கள், ஆவணங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் வரைபடங்கள் போன்றன இல்லாமை காரணமாக விசாரணைகளை நிறைவு செய்துகொள்ளும் நோக்கத்தை அடைந்துகொள்வது சவாலாக இருந்தது.

## 9.6 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

2017 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய ஆண்டினுள் 18 நிகழ்ச்சித்திட்டங்கள் உத்தேசிக்கப்பட்ட போதிலும் இவற்றில் 06 நிகழ்ச்சித்திட்டங்களின் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடிந்தது. மேலும் இலக்காகக் கொள்ளப்பட்டவாறு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 மற்றும் ஆரம்ப விசாரணைகள் 05 ஐ நடாத்த முடிந்தது.

விசாரணை நடவடிக்கைகளை வழிநடாத்துவதற்கு மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பிலான அறிவைக் கொண்ட அனுபவம்மிக்க பதவியணியினர் இப்பிரிவில் இல்லாமையினால் இப்பிரிவின் கடமை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கலான நிலைமை ஏற்படுகின்ற



பொலன்னறுவை திம்புலாகல
சந்தரெஸ்கம யாவருக்கும் புகலிடம்
பயன்களை கையளித்தல



வீடமைப்புத் தேவை பற்றிய
நாடளாவிய தரவுகளின் ஆய்வை
வெளியிடல



பொல்பிதிகம, விஜயபாகம மாதிரிக்
கிராமத்தை திறந்து வைத்தல



லுனுகம்வெகர சியதுருகம மாதிரிக்
கிராமத்தை திறந்து வைத்தல்



வீடமைப்புக் கருத்திட்டத்திற்கு இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடல



மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றத்தை



வில்கமுவ, ஜயவிஜயகம மாதிரிக்
கிராமக்கை கிறங்கு வைக்கல்



விசிறி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்
கொழும்பு மாவட்ட நிதி உதவி
காசோலைகளை வழங்கி வைத்தல

## 10. 2017 ஆம் ஆண்டு அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள.

- **நிரந்தர பதவி வெற்றிடங்களை நிரப்ப முடியாமை.**

- அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவிகளின் வெற்றிடங்களை முறையாக நிரப்புவதற்கு அமைச்சுக்கு 2017 ஆம் ஆண்டில் ஆற்றல் கிடைக்கவில்லை. முக்கியமாக அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் பிரதம நிதி அலுவலர், பணிப்பாளர் (பொறியியல் தொழில்நுட்பம்) மற்றும் பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு), உதவிப் பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு), உதவிப் பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) ஆகிய பதவிகளின் வெற்றிடங்களை, மேற்படி நாடளாவிய சேவைகளில் தகைமைவாய்ந்த அலுவலர்களுக்கு நிலவிய பற்றாக்குறை காரணமாக நிரப்ப முடியவில்லை.

  மேலும், கணக்காய்வு மற்றும் விசாரணை நடவடிக்கைகளுக்கு அனுபவம்வாய்ந்த பதவியணி இல்லாமை காரணமாக கணக்காய்வு நடவடிக்கைகளில் பின்னடைவு காணப்பட்டது.

- **சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு போதியளவு நிதி ஏற்பாடுகள் கிடைக்காமை.**

அமைச்சுக்குத் தேவையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு போதியளவு ஏற்பாடுகள் கிடைக்காமை காரணமாக 2017 ஆம் ஆண்டு அமைச்சின் நாளாந்த பணிகளுக்குத் தடை ஏற்படடது. அமைச்சில் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் உபயோகத்திற்கு போதியளவில் கணினி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள் மற்றும் பிரதி பண்ணி இயந்திரங்கள் காணப்படவில்லை என்பதுடன், அவற்றைக் கொள்வனவு செய்வதற்கும் போதியளவு ஏற்பாடுகள் அமைச்சுக்கு ஒதுக்கி இருக்காமை காரணமாக தற்போது பயன்படுத்துகின்ற உபகரணங்களை வினைத்திறனற்ற மட்டத்தில் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது. எனவே மேற்படி உபகரணங்களை அடிக்கடி புதுப்பிக்க வேண்டி ஏற்பட்டமை காரணமாக நாளாந்த பணிகளை முறையாக நிறைவேற்றிக் கொள்வது கடும் சவாலாக அமைந்தது.

- **வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது எதிர்நோக்கிய சவால்கள்.**

நிதி ஆண்டினுள் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த ஏற்பாடுகளுக்கு 100% ஆன நிதி முன்னேற்றம் ஆண்டின் இறுதியில் அடையப் பெற்றுள்ள போதிலும், கருத்திட்டக்ளின் பௌதீக முன்னேற்றத்தை பின்னடைவு இன்றி பேணிவருவதற்குத்

தேவையானவாறு நிதியை உரிய நேரத்திற்குப் பெற்றுக்கொள்வது கடினமானதாக இருந்தது. இதன் பெறுபேறாக ஆண்டின் நடுப்பகுதியில் திட்டங்களை திருத்தியமைக்க வேண்டி ஏற்பட்டது.

மேலும், மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான காணிகளை போதியளவில் இனங்காண்பதற்கு மற்றும் அதற்குக் ஒதுக்கிக் கொள்ளவும் முடியவில்லை. அவ்வாறு ஒதுக்கப்பட்ட மாதிரிக் கிராமம்

நிகழ்ச்சித்திடத்திற்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட காணிகளில் பெருமளவானவை அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் பற்றாக்குறையாக உள்ள பிரதேசங்களில் அமைந்துள்ளமை காரணமாக மாற்று வழிமுறைகள் ஊடாக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு செயற்பட வேண்டி ஏற்பட்டது.